செ. கு. எண்: 39 நாள்: 07.03.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 7.3.2019

---

பழம்பெரும் நாடக மற்றும் திரைப்பட நடிகருமான திரு. டைப்பிஸ்ட் கோபு அவர்கள் 6.3.2019 அன்று உடல் நலக்குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணக்கால் கிராமத்தைச் சேர்ந்த திரு. டைப்பிஸ்ட் கோபு அவர்கள் திரு. கே. பாலச்சந்தரின் நாணல் திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி, இதுவரை சுமார் 600-க்கும் மேற்பட்ட நாடகங்களிலும், 400-க்கும் மேற்பட்ட திரைப்படங்களிலும் பல்வேறு வேடங்களில் நடித்து மக்களின் மனதில் இடம் பெற்றவர். இவர் மூன்று தலைமுறை நடிகர்களின் படங்களில் நடித்த பெருமைக்குரியவர்.

திரு. டைப்பிஸ்ட் கோபு அவர்கள் நாடகத் துறைக்கு ஆற்றிய சேவைக்காக தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்ற பெருமைக்குரியவர். மேலும், இவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகியோருடன் நடித்த பெருமைக்குரியவர். அனைவரிடமும் அன்பாக பழகக்கூடியவரும், திரைத்துறையில் தனக்கென தனி முத்திரை பதித்தவருமான திரு. டைப்பிஸ்ட் கோபு அவர்களின் மறைவு தமிழ் திரையுலகிற்கு ஒரு பேரிழப்பாகும்.

திரு. டைப்பிஸ்ட் கோபு அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலக நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**